மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 12.07.2023 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

48) என் பிரமாண பத்திரிக்கையில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்து மீறி நுழைந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், எந்த தேதியில் அவ்வாறு அவர்கள் அத்து மீறி நுழைந்தார்கள் என என்னால் சொல்ல இயலுமா என்றால், குறிப்பாக என்னால் சொல்ல இயலாது.

49) என் பிரமாண பத்திரிக்கையில் பிரதிவாதிகள் சொத்தில் அத்து மீறி நுழைந்து சேதாரப்படுத்தியதாக நான் சொல்லியுள்ள நிலையில் என்ன சேதாரத்தை ஏற்படுத்தினார்கள் என்றால், வில்லை வீட்டை உடைத்து விட்டார்கள் மற்றும் தகராறு செய்தார்கள். தற்போது நான் பிரதிவாதிகள் ஓட்டை உடைத்துவிட்டனர் என கூறியுள்ள சங்கதியை என் பிரமாண பத்திரிக்கையிலோ, வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால், நான் சொல்லியுள்ளேன். என் பிரமாண பத்திரிக்கையில் நான் என் வீட்டையும், ஓடுகளையும் மட்டும் தான் சேதாரப்படுத்தினார்கள் என சொல்லியுள்ளேனா என்றால், அவ்வாறு தான் சொல்லியுள்ளேன். வேறு எதுவும் நான் சொல்லவில்லை என்றால், சரிதான்.

50) பிரதிவாதிகள் அத்து மீறி நுழைந்து தகராறு செய்தார்கள் என நான் சொல்லியுள்ள நிலையில், அதுகுறித்து காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்துள்ளேனா என்றால், அளித்துள்ளேன். அவ்வாறு நான் புகார் அளித்துள்ள நிலையில், அதுகுறித்த ஏதேனும் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

51) பிரதிவாதிகள் அத்து மீறி நுழைந்து தகராறு செய்ததாக சொல்லும் சமயத்தில் என் வீட்டில் யார் யாரெல்லாம் அந்த சமயத்தில் இருந்தோம் என்றால், நானும், என் அண்ணன் மகன்கள் இருவரும் மட்டும் தான் அங்கு இருந்தோம். எந்தெந்த

பிரதிவாதிகள் தகராறு செய்தனர் என்றால், பிரதிவாதிகளுள் 5, 6 நபர்கள் வந்தனர். அவர்கள் கூட்டமாக வந்ததால் என்னால் குறிப்பாக யார் என சொல்ல இயலாது. இவ்வழக்கில் அனைத்து பிரதிவாதிகளும் எனக்கு சொந்தக்காரர்கள் என்றாலும், அவர்கள் என் பங்காளிகள் என்றாலும், சரிதான்.

52) இவ்வழக்கில் உள்ள அனைத்து பிரதிவாதிகளும் என்னுடைய உறவினர்கள் என்ற நிலையில், நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடந்திருந்தால், யார் யார் வந்து தகராறு செய்தார்கள் என என்னால் குறிப்பாக சொல்ல இயலும் என்றாலும், அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறாமல், நடைபெற்றதாக பொய்யாக என் வழக்கில் சொல்லியுள்ளதால்தான் என்னால் தற்போது பிரதிவாதிகளின் பெயரை குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை என்றாலும், சரியல்ல.

53) நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அது தொடர்பாக நான் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவும் இல்லை என்றாலும், அவ்வாறு நான் புகார் அளித்திருந்தால் அது தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், நான் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யாதிலிருந்தே நான் சொல்லும் சங்கதி பொய்யானது என தெரிய வருகிறது என்றாலும், சரியல்ல. நானும், பிரதிவாதிகளும் மாறி மாறி புகார் அளித்தோம். பிரதிவாதிகளின் புகாரை மட்டும் தான் காவல்துறையினர் பெற்றுக்கொண்டனர். நான் அளித்த புகாரை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை.

54) அவ்வாறு நான் அளித்த புகாரை மேச்சேரி காவல்நிலையத்தில் பெற மறுத்து விட்டனர் என நான் சொல்லும் நிலையில் அவ்வாறு என் புகாரை ஏற்றுக்கொள்ளாதது தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளரிடமோ, மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமோ சென்று மேல்நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால், இல்லை.

55) நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னரே இந்த வழக்கின் பிரதிவாதிகள் 2 ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் மீது அ.வ.எண்.194/2013 என்ற

வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரிதான். மேற்படி அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் இந்த பிரதிவாதிகள் என்ன பரிகாரம் கோரியுள்ளனர் என்றால், தடம் கேட்டு தாக்கல் செய்துள்ளனர்.

56) பிரதிவாதிகள் என் மீது அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், நான் பிரதிவாதிகள் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்வதற்கு முகாந்திரம் வேண்டும் என்பதற்காக தான் பிரதிவாதிகள் என் வீட்டை சேதப்படுத்தியதாக ஒரு பொய்யான சங்கதியை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்து பிரதிவாதிகள் கோரிய தடவழி பரிகாரம் அவர்களுக்கு கிடைக்க கூடாது என கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால், சரியல்ல.

57) நான் இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு தான் என் மூத்த சகோதரரான 1ம் வாதியும், என் தாயாரான 4ம் வாதியும் இறந்துவிட்டனர் என்றால், சரிதான். மேற்படி அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு தாவா சொத்தை பார்வையிட்டு நீதிமன்றத்தில் தன் அறிக்கையை தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். அப்போது நாங்கள் வழக்கறிஞர் யாரும் வைக்கவில்லை.

58) மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு இதுவரையில் மேற்படி வழக்கில் நாங்கள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.